பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 29 | 14-08-94 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 177

## எயிட்ஸ் வைரசைக் கட்டுப்படுத்தும் சக்தி அஸ்பிரினுக்கு உண்டு

உயிர்கொல்லி நோயான எயிட்ஸ் கிருமியான எச். ஐ. வி வைரசைக் கட்டுப்படுத்தும் திறன், வலி நிவாரணியான அஸ்பிரினுக்கு இருப்பதாக அமெரிக்க மருத்துவ சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது. பேராசிரியர்களான எலிசபெத் ஹெறாக், சங்கர் தேஷ் ஆகியோர் இணைந்து இம்முடிவை வெளியிட்டுள்ளதாகவும் அச்சஞ்சிகை தெரிவித்துள்ளது. எச். ஐ. வி. வைரசின் பெருக்கத்தை அஸ்பிரின் கட்டுப்படுத்தும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# குடாநாட்டின் பல பகுதிகள் மீதும் அகோர ஷெல் வீச்சு; ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட ஏழுபேர் பலி!

(நமது நிருபர்)

பலாலியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று நண்பகல் முதல் யாழ் குடாநாட்டின் மக்கள் குடியிருப்புகள் மீது பரவலாக மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட ஏழு பேர் பலியானதுடன் 20ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். பெருமளவு உடைமைகள் நாசமாகியதுடன் சந்நிதி ஆலய மடமும் சேதமடைந்தது.

நேற்று நண்பகல் 1.30மணி முதல் பலாலி இராணுவ முகாம் படையினர் ஏவிய எறிகணைகள் சுழிபுரம், அளவெட்டி, மல்லாகம், ஏழாலை, ஈவினை, நீர்வேலி, அச்சுவேலி, புத்தூர், தொண்டமானாறு, வல்வை பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

ஏழாலைப் பகுதிகளில் பரவலாக வீழ்ந்து வெடித்த எறிகணைகளால் சிறுவன் ஒருவர் பலியானதுடன் இருவர் காயமடைந்தனர்.

அச்சுவேலிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட ஆறு பேர் பலியானதுடன் பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

வல்வெட்டித்துறை நெடிய காட்டுப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையால் இரு பெண்கள் படுகாயமடைந்த நிலையில் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிவன்கோவிலுக்கு அருகாமையில் வீழ்ந்து வெடித்த எறிகணையால் இருவர் காயமடைந்தனர். சந்நிதி ஆலயப்

(5 ஆம் பக்கம் பார்க்க

# கட்டுமுறிவு ராணுவ முகாம் முற்றாக அழிப்பு; கொல்லப்பட்ட படையினர் 25க்கு மேல்!

## 30 நிமிடத் தாக்குதலில் முகாம் வீழ்ந்தது

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆண்டாங்குள பிரதேசத்திலுள்ள கட்டுமுறிவு இராணுவ எஸ். எவ். முகாம் கடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிப் போராளிகளால் தாக்கி நிர்மூலமாக்கப்பட்டது சுமார் 30 நிமிட உக்கிர மோதலின் பின் முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. 25க்கு மேற்பட்ட இராணுவத்தினர் இம் மோதலின்போது கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். ஏனையோர் தப்பி ஓடினர்**

**இம் மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் 17 பேர் வீரச்சாவடைந்தனர்.**

கடந்த வியாழக்கிழமை இரவு 11-52 மணியளவில் இம் முகாம் மீதான அதிரடித் தாக்குதல் நடத்தப்பட் [...] பாட்டுக்குள் கொண்டுவந்ததோடு, அம்முகாமையும் அழித்தனர்.

இம் மோதலின் போது 25 [...] கொண்டு தப்பி ஓடினர்.

இதே சமயம் இம் முகாம் மீதான தாக்குதலில் 11 படையினர் கொல்லப்பட்ட [...] முகாம்கள் மீது விடுதலைப் புலிகளால் தொடர்ச்சியான மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குத

## 4 வேட்பாளர் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் ஒருவரின் மனைவியைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தியதாகவும், ஐந்து வீடுகளை தாக்கியதாகவும், மட்டக்களப்பு மாவ

(5ஆம் பக்கம் பார்க்க)

## இடை விடா விமான பறப்பு

(குருநகர்)

## ஜனாதிபதி மாளிகைக்கு மின்சாரவேலி அமைப்பு

(கொழும்பு)

கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகின்றது. ஜனாதிபதி மாளிகையைச் சுற்றியுள்ள மதிற்சுவரின் மேல் மின்சாரம் பாய்ச்சப்பட்ட கம்பிச் சுருள்கள் அமைக்கப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தல்கால வன்செயல்களின் போது ஜனாதிபதி மாளிகை தாக்கப்படாமல் இருக்கவே இவ்வாறான பாதுகாப்பு பலப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம் முகாம் மீதான அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது. முதலில் இம்முகாமைச் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் 30 நிமிட உக்கிரமோதலின் பின் முகாமைத் தமது கட்டுத்தனர்.

இம்மோதலின் போது 25க்கும் மேற்பட்ட சிறிலங்காப் படையினர் கொல்லப்பட்டதோடு பலர் காயமடைந்தனர். அநேகர் காயமடைந்த தமது சகாக்களையும் தூக்கிக்

மீதான தாக்குதலில் 11 படையினர் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே.

இதேவேளை கதிரவெளி, திருக்கணாமடு பகுதியில் அமைந்துள்ள இரு இராணுவ

மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

இத்தாக்குதல் நடைபெற்ற நேரம் உலங்கு வானூர்தி ஒன்று தொடர்ச்சியாக 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

(குருநகர்)

கடந்த 48 மணிநேரங்களில் சிறிலங்கா வான் படையைச் சேர்ந்த அவ்ரோ, புக்காரா, வை - 8 ரக, வை - 12 ரக குண்டுவீச்சு விமானங்களும் உலங்கு வானூர்திகளும் குடா

(5 ஆம் பக்கம் பார்க்க)

கள் அமைக்கப்பட்டு வருவ... வருகின்றன.

## தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம்

## அடக்கமான முறையில் உற்சவம் நடத்த ஏற்பாடு

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய உற்சவங்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் 20 ஆம் திகதி சனிக்கிழமைவரை மிகவும் அடக்கமான முறையில் நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். யாழ். அரசாங்க அதிபர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிடப்பிரதிநிதி ஆகியோரின் வேண்டுதலுக்கு அமைய இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே காவடி கற்பூரச் சட்டி முதலிய நேர்த்திகளை பிறிதொருசந்தர்ப்பத்தில்நிறைவேற்றிக் கொள்ளும்படிகேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# 17 போராளிகள் வீரச்சாவு

கடந்த 11-ம் திகதி இரவு மட்டக்களப்பு மாவட்டம் ஆண்டாங்குள பிரதேச கட்டுமுறிவு இராணுவ எஸ். எல். முகாம்மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது 17 விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

- ● மேஜர் சங்காதரன், (நடராஜா இராஜேந்திரம், மட்டக்களப்பு.
- ● லெப்டினன்ட் றொபெட்சன் - கமலவன் (கதிர்காமத்தம்பி இராசலிங்கம், மட்டக்களப்பு)
- ● லெப்டினன்ட் நம்பி - பாலு (முத்துலிங்கம் தவபாலன், மட்டக்களப்பு)
- ● லெப்டினன்ட் ரகுநாதன் (மாணிக்கம் விஜேந்திரன், மட்டக்களப்பு)
- ● லெப்டினன்ட் அருந்தாதரன் - அழகன் (கைலாயபிள்ளை உதயகுமார், மட்டக்களப்பு)

(5ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் அமைதியாக நடத்த கட்சிகளிடையே ஒப்பந்தம்

(கொழும்பு)

பொதுத்தேர்தல் அமைதியாக நடத்தப்பட வேண்டும், இதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் அரசியற் கட்சிகளுக்கிடையே ஒப்பந்தம் ஒன்று நேற்று கைச்சாத்தானது.

ஐந்து பிரதான கட்சிகளையும் மற்றும் குழுக்களையும்

(5ஆம் பக்கம் பார்க்க)

# கட்டுமுறிவுபடை முகாமில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்டுமுறிவுகுள இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிப் போராளிகள மேற்கொண்ட தாக்குதலின் போது கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு,

| | | |
|---|---|---|
| ★ 81 எம். எம். மோட்டார் | — | 01 |
| ★ அதற்குரிய ஷெல் | — | 32 |
| ★ பூஸ்டர் பெட்டி | — | 02 |
| ★ ஸ்கோப் | — | 01 |
| ★ பேஸ்பிளேட் | — | 01 |
| ★ 60 எம். எம். மோட்டார் | — | 04 |
| ★ அதற்குரிய ஷெல் | — | 22 |
| ★ பூஸ்டர் பெட்டி | — | 02 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. | — | 03 |
| ★ ரம் மகசின் | — | 05 |
| ★ தொடர் ரவை | — | 845 |
| ★ ஆர். பி. ஜி. | — | 03 |
| ★ அதற்குரிய ஷெல் | — | 25 |
| ★ ரி. 56 - 11 | — | 06 |
| ★ ரி. 56 - 1 | — | 02 |

(5ஆம் பக்கம் பார்க்க)

# படகு மூழ்கடிப்பு; 3 படையினர்பலி; அராலிக்கடலில் புலிகள் தாக்குதல்

அராலிக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை மீனவர் மீது தாக்குதல் நடத்துவதற்காக படகில் வந்து கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரை வழிமறித்து புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 3க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் ஏனையோர் காயங்களுடன் ஓடிவிட்டனர் படகு கைப்பற்றப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. ஆயுதங்களும்விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டன.

நேற்று அதிகாலை 1. 45 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் மூன்று உடல்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இவர்களுக்கு உதவியாக தாக்குதல் நடத்திய வோட்டர் ஜெட் மற்றும் உலங்கு வானூர்தி என்பன மீதும் விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர் இதன் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

இத்தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# முல்லை மோதலில் 3 புலிகள் வீரச்சாவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில், கடந்த மே மாதம் 5-ம் திகதியன்று சிறிலங்கா இராவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலொன்றில் மூன்று விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

- ● கப்டன் தேவன்/இளங்குமணன், (பாலசிங்கம்ஜெயபாலன், உரும்பராய் தெற்கு, உரும்பராய்)
- ● லெப். மன்மதன்/அஜீத் (தங்கராசா முருகன் மட்டக்களப்பு)
- ● 2ஆம் லெப். செல்வக்குமரன்/பல்லவன் (செல்லத்துரை நந்தகுமாரன் நீர்வேலி தெற்கு, நீர்

(5ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பலி

(கொழும்பு)

நுவரெலியா, கந்தப்பளையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றின் பின் நடந்த கலகமொன்றில் காயமடைந்த தமிழர் ஒருவர் வைத்தியசாலையில் மரணமானார்.

இச்சம்பவத்தின் போது கை வெட்டப்பட்ட நிலையில் இன்னொருவர் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# அராலி கடற்பரப்பு மோதலில் புலிகளால் கைப்பற்றப்பட்டவை

யாழ்ப்பாணம்)

நேற்றுஅதிகாலை அராலிக் கடற்பரப்பில் மீனவர்களைதாக்குவதற்காக படகில் ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினரை வழிமறித்து விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:

| | |
|---|---|
| ★ ரி.56 - 11 | - 02 |
| ★ ரி 81 | - 02 |
| ★ ரி 56 புதிய ரகம் | - 02 |
| ★ வோக்கி | - 01 |
| ★ ஏ. கே ரவைக்கூடு | - 12 |
| ★ ரி. 81 ரவைக்கூடு | - 06 |
| ★ ஐ. எம். ரவை | - 230 |
| ★ ஏ. கே. கோல்சர் | - 03 |
| ★ நீர்காப்புக் குண்டு | - 13 |
| ★ குண்டு கோல்சர் | - 03 |
| ★ ஹெல்மட் | - 01 |
| ★ நீச்சல் சப்பாத்து | - 01 |
| ★ நீச்சல் கண்ணாடி | - 02 |
| ★ பெற்றோல் தாங்கி | - 02 |
| ★ வயர் | - 01 |
| ★ பெற்றோல் | - 25 லீட்டர் |
| ★ 40.எச். பி. என்ஜின் | - 01 |

## வரி விளம்பரம்

**வேப்பமரம் தறிப்பதற்கு கூறுவிலை கோரல்**
விபரங்களுக்கு :- அதிபர், மகளிர் மகா வித்தியாலயம் சாவகச்சேரி. 17-ம் திகதிக்கு முன் விரும்பத்தக்கது பாடசாலை அபிவிருத்தி சபை.
(9082)

**வெளிவந்து விட்டது வியாழ மாற்றம்**
PROF. T. சத்தியதாஸன் கணிப்பில். ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீகாந் புத்தகசாலை- நல்லூர். மக்மிலன் புத்தகசாலை- யாழ்ப்பாணம். இந்தியா ருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்துவிட்டது. சிவம் நீதிக்கதைகள் 3,4,5,6 ஆண்டு 5 கணிதம், தமிழ் 94 வினா விடைகள் (சி- 10101)

**பயன்தரு மரங்கள்**
மரமுந்திரி (கஜு), சர்க்கரை வேம்பு, இஞ்சி, பலாக் கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு - ''மில்க்வைற்''
(சி/10105)

**தவறிவிட்டது**
கே. ரகுபதி என்பவரின் சைப்பை ஒன்று திருநெல்வேலி அம்மன் கோவிலுக்கும் சிவன் கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்துக்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கே. ரகுபதி, நிவ்விக்ரர், யாழ்ப்பாணம்
(9093)

**விற்பனைக்கு**
ஒருவருடம் கழிந்த நல்ல பழக்கமுள்ள பியூட்டி (சடை) அல்ஷேஷன் ஆண் நாயும், புடவைக் கடைக்கேற்ற பழைய தளபாடங்களும், விற்பனைக்குண்டு I K. நடேசன் ''நந்தினி வாசா'' மகேந்திரன் வீதி, அரியாலை.
(9095)

**தேவை**
கல்தேக்கு (கத்தாப்பு) விதை விலைக்கு வாங்குகிறோம். ''மில்க்வைற்''
(சி-1 0111)

## பிற்போடப்பட்டுள்ளது

கொக்குவில் மேற்கு அம்பாள் சனசமூக நிலைய நிதிக்காக இன்று (14-08-94) நடைபெற இருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு, சில தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. எதிர்வரும் 07 - 09 - 94ல் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இப்படிக்கு
சி. சின்னராசா
தலைவர்

(சி-10107)

## விசேட அறிவித்தல்

யாழ். மாவட்ட சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அதிர்ஷ்டலாபச் சீட்டின் அதிர்ஷ்டம் பார்க்கும் நாள், **07. 09. 1994 -ல் பின் போடப்பட்டுள்ளதனை அறியத்தருகின்றோம்.**

நிர்வாகம்
-சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்.

(9089)

**அறிந்ததைச் சொல்லுங்கள்!**
**பதக்கத்தை வெல்லுங்கள்!**

## தமிழீழத் தாயகத்தை தெரிந்து வையுங்கள்.

உங்கள் அறிவு மேம்படுத்தலுக்கு

**''தமிழீழத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்''**
வினாவிடைப் போட்டி

**ஒரு பவுண் தங்கப் பதக்கம் பரிசு**


அன்பு மாணவர்களே!
உங்கள் அறிவினை வளமாக்கி
உங்கள் திறமையை வெளிக்காட்டுங்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியினரால் நல்லூர்க் கண்காட்சியை முன்னிட்டு நடாத்தப்படவிருக்கும் வினாவிடைப் போட்டியில் கலந்து கொண்டு முழுநிறைவான தங்கப்பதக்கத்தையும் பெறுமதி மிக்க பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 15-08-1994**

விபரங்கள் கடந்த 07, 08, 09-ம் திகதி

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில்
18 12-1973

வீரத்தாய் மண்ணில்
18-07-1991

**2-ம் லெப். குமுதன்**
**(வைத்திலிங்கம்-தயாளன்)**
**திதி: 14-8-'4**

தாயக விடிவுக்காய் தன்னுயிரைக் கொடுத்தவனே
ஆனையிறவு மண்ணிலே உன் இறுதி மூச்சு
ஆகாயம் கடல்வெளி யெங்கும் உன் பேச்சு
ஆண்டுகள் மூன்று கடந்தாலும் நீங்காது உன்
-நினைவுகள்.

இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்கட்கும் எமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் கிரியையில் சகபோராளிகள், நண்பர்களையும், உறவினர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

உன் பிரிவால் வாடும்,
அப்பா, அம்மா, அக்கா,
அண்ணா, உறவினர்கள்.

(9090)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## நினைவு கூருகின்றோம்...

**14-08-1994...**

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு-களுதாவளைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த,

**குருசாமி** (கா. இரத்தினசிங்கம்-களுதாவளை-மட்டு)
**வினோபா** (க ஜெகதீஸ்வரன் - களுவாஞ்சிக்குடி -மட்டு)

1989-ம் ஆண்டு மட்டு-பழுகாமம் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சுப்பிரமணியன்** (சுப்பிரமணியம் கிதாகரன்-ஆரையம்பதி-மட்டு)

மட்டு-38-ம் கிராமம் பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**நந்தன்** (சின்னத்தம்பி நந்தகுமார் - 38-ம் கிராமம்- மட்டு)

இதே பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கண்ணன்** (- - பெரியபோரதீவு - மட்டு)

திருமலை-மேன்காமம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

**சுட்டா** (ப. சிறிஸ்கந்தராசா-சங்குவேலி-திருமலை)

1990-ம் ஆண்டு மட்டு-தாந்தாமலைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**அன்ரூ** (- - - அக்கரைப்பற்று-அப்பாறை)
**செல்வா** (வேல்முருகு தவராசா-களுமுந்தான்வெளி- மட்டு)
**துஷ்யந்தன்** (- - - கரவெட்டி-மட்டு)

1991-ம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**வின்சன்** (முத்துராசா சுரேஸ்குமார்-பாலமோட்டை, தம்பலகமம்-திருமலை)
**லெப்.சாப்தீன்** (சரவணைமுத்து இராஜேந்திரன்- மருதங்குளம், புத்துவெட்டுவான்-கிளி)

1993-ம் ஆண்டு மட்டு-அம்பாறை மாவட்டத்தில் உன்னிச்சை, குதம்பாகாட்டுப் பகுதியில் எதிர்பாராத விதமாக சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**கமல்** (ஆனந்தன் சிவகுமார்-மன்னம்பிட்டி-மட்டு)
**தேவநிதன்** (அருளம்பலம் சுதர்சன்-வன்னியார்வீதி, களுதாவளை-மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும், இலங்கை, இந்தியப்படைகளாலும், தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்,

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10106)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

வாங்குகிறோம்.
''மில்க்வைற்''
(சி-1 0111)

சாரதா

கோமல் சுவாமிநாதன் பேட்டியுடனும் இலங்கை எழுத்தாளர்களின் ஆக்கங்களுடனும் இலங்கைச் சிறப்பிதழாக இப்பொழுது விற்பனையாகிறது. (9098)

## துளிர்

தமிழ் நாடு, புதுவையில் பள்ளி மாணவரிடையே பெரும் வரவேற்பைப் பெற்று பல இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் சிறுவர்க்கான அறிவியல் மாத இதழ் இப்பொழுது யூன், யூலை இதழ்கள் எங்கும் விற்பனையாகிறது. (9097)

## அதிபர்க்கான கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில் பாடசாலை தொகை மதிப்பீடு தொடர்பாக அதிபர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் திங்கள் காலை 9 மணிக்கு யா/சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (86)

## பெயர்கள் நீக்கம்

ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவில் இருநூறுக்கு மேற்பட்ட வாக்காளர்களின் பெயர்களை சட்டவிரோதமாக வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கியதாக இரு கிராம சேவை உத்தியோகத்தர்கள் விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இக் கிராம சேவர்களின் ஆதரவான கட்சிக்கு, எதிரணியினரான இவ் இருநூறு பேரின் பெயர்களே நீக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது

சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 15-08-1994

விபரங்கள் கடந்த 07, 08, 09-ம் திகதி பத்திரிகைகளில்

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
(சி-10099)

எமது மண்ணில் நற்பெயர் பெற்றது




றோயல் றோஸ் ரால்கம்பவுடர்


- நறுமணமிக்கது
- சுகாதாரமிக்கது
- புத்துணர்ச்சியானது
- அனைவராலும் விரும்பதக்கது
- விலை மலிவானது

தீபா றோஸ் ரால்கம்பவுடர்




அழகிய கொள்கலன்களில் அற்புத தயாரிப்பாக விற்பனையிலுள்ளது

றோயல் இண்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை.



## திரு. தம்பையா முருகேசு

(இளைப்பாறிய இ. போ. ச. சாரதி)

| மண்ணுலகில்: | விண்ணுலகில்: |
|---|---|
| 05 - 10 - 1928 | 15 - 07 - 1994 |

அன்பின் பிறப்பிடமே! அரவணைப்பின் பொக்கிசமே!
பண்பின் உறைவிடமே! பாசத்தின் புகலிடமே!
சொந்தந்தனை மறந்து தொலை தூரம்சென்றதேனோ!
சொர்க்கமது சுகமது சுகமென்றோ சென்றீர்கள்!
பொங்கிவரும் கண்ணீரால் பொறுக்குதில்லை எம்மனது
உருக்கமான உங்கள் முகம் உலகிலினிக் காண்போமோ
இரக்க மனதுடனே இராப்பகலாய் ஏங்குகிறோம்
மறக்க முடியவில்லை மறுபிறப்பாய் எம்மிடம்
- வாரும் அப்பா.

எங்கள் குல தெய்வமாகிய அமரர் திரு. த. முருகேசு, இராசமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கலாநிதியின் அன்புத் தந்தையுமாவார். ரவீந்திரராஜா, புஸ்பராஜா, சிவாநிதி (சுவிஸ்), ஜீவராசா, குணாநிதி (கைதடி), ஆகி 'யாரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணபகவான் (சுவீஸ்), ரவி (மாங்குளம்) ஆகியோரின் மாமனாரும், குமுதினி, சத்தியதேவி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், சுகீசன் (சுவிஸ்), கஜந்தன் (கைதடி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். நடராசா, சுப்பிரமணியம் ஆச்சிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற (நவரெத்தினராசாவின்) செல்வராசாவின் மைத்துனரும் ஆவார்.

14-08-94 இன்று அன்னாரின் வீட்டுக்கிருத்திய அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

'செல்வா வாசா'
கைதடி கிழக்கு,
கைதடி. (9092)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
11-08-1938

இறப்பு:
14 08-1989

கிறிஸ்துவுக்குள் கிறிஸ்ததாஸ்

### கதிரேசு சிவகுரு

வைத்திய ஆய்வுகூட ஆய்வாளர் (M.L.T)

முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.

''மலரகம்''
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (8091)

குடும்பத்தினர்
உறவினர்கள்.

## அறிவித்தல்

### சாராய போத்தல் கொள்வனவு

சாராய போத்தல் விற்பனை செய்ய விரும்புவோர் மொத்தமாகவும், சில்லறையாகவும் எமது யாழ் அருச்சுனா வீதியிலுள்ள சந்தைப்படுத்தல் பிரிவில் வழங்கலாம். விநியோகத்திற்கேற்ப விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்
வடமாகாண ப. நெ. வ.
அ. கூ. ச. சமாசம்

இல, 499, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம். (சி-10108)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# விஞ்ஞானம் O/L

## பகுதி A

### 1. இரசாயன தாக்கவீதம்

1) ஒரு அலகு நேரத்தில் நடைபெறும் தாக்கத்தின் அளவே இரசாயன தாக்க வீதம் ஆகும்.

3 செக்கனில் நடைபெற்ற தாக்கம் = 6 மூல் எனின்

1 ,, ,, ,, $= \frac{6}{3}$

$= 2$ மூல்

∴ தாக்கவீதம் /2 மூல் செக்கன்

2) தாக்கவீதம் $= \frac{\text{நடைபெற்ற தாக்கம்}}{\text{எடுத்த நேரம்}}$

குறிப்பு;- நடைபெற்ற தாக்கத்தின் அளவு செலவழித்த தாக்கியின் அள்வால் அல்லது உண்டான விளைவின் அளவால் பெறப்படும்.

உ+ம்: நாகம் ஐதரோக்குளோறிக்கமிலத்துடன் தாக்கம் புரியும் போது எவ்வளவு நாகம் தாக்கம் புரிந்துள்ளது, அல்லது எவ்வளவு ஐதரசன் வெளிவந்துள்ளது என கணிக்க வேண்டும்.

3) தாக்க வீதத்தின் அலகுகள்; 1) $mol s^{-1}$
2) $g s^{-1}$
3) $cm^3 s^{-1}$

4) தாக்கவீதம் பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது.
1) தாக்கியின் பௌதீகநிலை
2) ,, செறிவு
3) வெப்பம்
4) ஊக்கி

5. தாக்கவீதம் பௌதீக நிலையில் தங்கி இருத்தல்

செய்கை;- ஒரே அளவும் ஒரே செறிவும் உள்ள ஐதான Hcl ஐ A, B என்ற பரிசோதனைக் குழாய்களில் எடுக்கவும். ஒரே திணிவுள்ள நாகத்தை எடுத்து A யினுள் கட்டியாகவும், B யினுள் தூளாக்கியும் இடவும்.

அவதானம்;- A யிலும் B யில் நாகம் விரைவாக தாக்கமடையும்

முடிவு;- தாக்கியின் பௌதீகநிலை தாக்க வீதத்தை பாதித்துள்ளது.

6. பௌதீகநிலை தாக்கவீதத்தை பாதிக்கும் தோற்றப்பாடுகள்

அ) கொத்தாத விறகிலும் கொத்திய விறகு விரைவில் எரிதல்
ஆ) பெரிய துணிக்கையாக உள்ள சீனியிலும் நுண் துணிக்கைகளை கொண்ட சீனி விரைவில் கரைதல்
இ) இரும்புத்துண்டு எரிவதில்லை இரும்புத்தூள் எரிதல்.
ஈ) மண்ணெய் பாத்திரத்தினுள் உள்ளபோது தீப்பற்றாது விசிறப்படும்பொழுது தீப்பற்றுதல்.
உ) நன்றாக மென்று சாப்பிடும்பொழுது விரைவில் சமிபாடு அடைதல்.

7. தாக்கியின் செறிவு தாக்கவீதத்தை பாதித்தல்

செய்கை !! ஐதான Hcl, செறிந்த Hcl ஆகியவற்றில் ஒரே அளவு அமிலங்களை வெவ்வேறு பரிசோதனைக் குழாய்களில் எடுத்து இரண்டினுள்ளும் ஒரே அளவு ஒரே தன்மையான நாகத் துண்டுகளை இடவும்.

அவதானம்;- ஐதான அமிலத்தில் இட்டதிலும் பார்க்க செறிந்த அமிலத்தில் இட்டதில் தாக்கம் விரைவாக நடைபெறும்.

முடிவு;- தாக்கியின் செறிவு தாக்க வீதத்தை பாதிக்கும்.

### 8. தாக்கியின் செறிவு தாக்கவீதத்தை பாதிக்கும் சந்தர்ப்பம்

உணவருந்தும் போது அதிக நீர் பருகாதீர் என கூறுதல்.

நீர் நொதியங்களை ஐதாக்குவதனால் சமிபாட்டுத் தாக்கவீதம் குறைய சமிபாடு அடைய நீண்ட நேரம் எடுக்கும்.

### 09. ஊக்கி

1) தாக்கத்தில் ஈடுபடாது தாக்க வீதத்தை மாற்றும் காரணி ஊக்கியாகும்.
2) இரசாயனத் தாக்கத்தில் ஊக்கியின் திணிவிலோ அல்லது இரசாயன அமைப்பிலோ மாற்றம் ஏற்படாது.
3) தாக்க வீதத்தை கூட்டுவது நேருக்கி எனவும் தாக்க வீதத்தை குறைப்பது எதிருக்கி எனவும் அழைக்கப்படும்.




3. திரவவிழையம் பெரும்பகுதி (90 – 92%) நீர் சேதனப் பொருள் அசேதனப் பொருள் ஓமோன், வாயுக்கள் என்பவற்றால் ஆக்கப்பட்டது.

4. சேதனப்பொருள் (காபனால் ஆக்கப்பட்டவை) மூன்று வகைப்படும்
1) புரதம் (அல்புமின் / குளோபியூலின்)
2) புரதத்தன்மை அற்ற நைதரசன் பொருள் (யூரியா, யூரிக்கமிலம்)
3) நைதரசன் அற்ற பொருள் (குளுக்கோஸ் / கொலிசித்திரோல்)

செங்குழியம் -
(1) வட்டவடிவானது இருபக்க குழிவுடையது.
(2) முலையூட்டிகளில் கருவற்றது (ஒட்டகம் தவிர)
(3) குருதி நிறப்பொருளைக் கொண்டது.
(4) ஒட்சிசனை உறிஞ்சிக் கலங்களுக்கு விநியோகிக்கிறது.
(5) சிவப்பு என்புமச்சையில் உற்பத்தியாகும்
(6) 120 நாட்கள் வாழும்
(7) ஈரலிலும் மண்ணீரலிலும் அழியும்.

குறிப்பு-:
(1) மனிதன் போன்ற சிவப்பு நிற குருதியுடைய விலங்குகளில் ''ஈமோக்குளோபின்'' என்னும் நிறப்பொருள் காணப்படும்.
(2) ஈமோகுளோபின் இரும்பாலும் புரதத்தாலும் ஆக்கப்பட்டது
(3) ஒட்சிசனை உறிஞ்சக் கூடியது
(4) Hb என ஈமோகுளோபினை குறிக்கலாம்.

வெண்குழியம்:-
1. செங்குழியத்தைவிட பெரியது எண்ணிக்கையில் குறைவு
2. சோணைகளை உடைய கருவைக் கொண்டது
3. வெண்குழியப்பாகுபாடு

வெண்குழியம்
- சிறுமணியைக் கொண்டவை
  - மூலநாடி
  - இயேசுநாடி
  - நடுநிலை நாடி
- சிறுமணி அற்றவை
  - ஒற்றைக்குழியம்
  - நிணநீர்க்குழியம்

4 தின்குழியச்செயல், பிறபொருள் எதிரியைச் சுரத்தல் போன்ற செயல் முறைகளால் நோய்க்கிருமிகளை அழித்து நோயில் இருந்து பாதுகாக்கிறது

குருதிச்சிறுதட்டு
(1) தட்டுவடிவானது
(2) கருவற்றது
(3) உடலில் இருந்து வெளியேறும் குருதியை உறையச் செய்வதில் பங்கு கொள்ளும்.

## குருதிச் சுற்றோட்டத் தொகுதி

01) நாடி, நாளம், இதயம், குருதிமயிர்த்துழைக்குழாய் என்பவற்றால் ஆக்கப்படும்.

02) இதயம் - குருதி அசைவதற்கு வேண்டிய விசையைக் கொடுக்கும்.
நாடி - இதயத்திலிருந்து அங்கத்திற்கு குருதியைக் கொண்டு செல்லும்.
நாளம் - அங்கத்தில் இருந்து இதயத்திற்கு குருதியைக் கொண்டு செல்லும்.
குருதிமயிர்த்துழைக்குழாய்;- நாடி நாளத்தை இணைப்பதுடன் பதார்த்தங்கள் பரிமாறுவதற்குரிய அமைப்பாகவும் தொழிற்படல்

03) மனிதனில் மூடிய இரட்டைக் குருதிச் சுற்றோட்டத் தொகுதி காணப்படும்.

04) மண்புழு, இறால் போன்றவற்றில் சிறந்த குருதிச் சுற்றோட்டத் தொகுதி காணப்படும்.

05) இதயத்தின் அமைப்பும் தொழிற்பாடும்
(A) அமைப்பு

தொழிற்பாடு

[01] சோணை அறைகள் இரண்டும் ஒன்றாகச் சுருங்கி ஒன்றாக விரியும். இவ்வாறு இதயவறைகள் இரண்டும் ஒன்றாகச்சுருங்கி ஒன்றாக விரியும். ஆனால் சோணையறைகள் சுருங்கும் பொழுது இதயவறைகள் தளர்ந்தும் இதயவறை சுருங்கும் பொழுது சோணையறைகள் தளர்ந்தும் காணப்படும்.

[02] உடலின் மேற்பகுதி (தலை, முன்னவயவம்)யில் இருந்து மேற்பெருநாளத்தின் ஊடாகவும் கீழ்ப்பகுதியில் இருந்து பிற்பெருநாளத்தின் ஊடாகவும் அசுத்தக்குருதி வலது சோணை அறையை அடையும்.

[03] வலதுசோணை அறையை அடைந்த குருதி வலது சோணை அறை சுருங்கும் பொழுது முக்கூர்வால்வு திறபட வலது இதயவறையை அடையும். மீண்டும் நாளங்களினூடாக செல்லாது நாளங்களில் உள்ள வால்வுகள் தடுக்கும்.

[04] பின் வலது இதயவறை சுருங்கும் பொழுது முக்கூர்வால்வு மூடும். இதனால் மீண்டும் வலது சோணை அறையை குருதி செல்லாது தடுக்கப்படும். இந்நிலையில் அரைமதி வால்வு திறபட சுவாசப்பை நாடியூடாக சுவாசப்பையை குருதி அடையும்.


[05] சுவாசப்பையில் குருதி சுத்திகரிக்கப்பட்டு சுவாசப்பை நாளங்களின் ஊடாக இடதுசோணை அறையை குருதி அடையும்.

சு. அருள்நேசன்

[06] இடதுசோணை அறைசுருங்கும் பொழுது இருகூர்வால்வு திறபட குருதி இடது இதயவறையை அடையும். இடது இதயவறை சுருங்கும் போது இருகூர்வால்வு மூட மீண்டும் இடது சோணையறையை அடையாது தடுக்கப்படும். இந்நிலையில் அரைமதி வால்வு திறபட குருதி தொகுதிப் பெருநாடியூடாக உடலின் ஏனைய பகுதிகளுக்கு அனுப்பப்படும்.

குறிப்பு:-
1. வலது இதயவறையிலும் இடது இதயவறையில் அமுக்கம்கூட என்பதனாலேயே இடதுஇதயவறை தடிப்புக் கூடியதாகவுள்ளது.
2. வலது இதயவறையில் உள்ள குருதி சுவாசப்பைக்கு மட்டும் செலுத்தப்படுகிறது. இடது இதயவறையில் உள்ள குருதி உடலின் எல்லாப் பாகங்களுக்கும் (கூடிய இடத்திற்கு) செலுத்த வேண்டியுள்ளதால் இடது இதயவறையில் கூடியளவு அமுக்கம் காணப்படும்.
3. அரைமதிவால்வுகள் இதயவறைகளில் இருந்து சுவாசப்பை நாடி தொகுதிப்பெருநாடியினுள் சென்ற குருதியை மீண்டும் இதயவறைகளினுள் செல்லாது தடுக்கும்.
4. எமது உடலில் ஒரு அங்கத்தில் உள்ள குருதி வேறோர் அங்கத்திற்கு செல்வதற்கிடையில் இருமுறை இதயத்தைத் தாண்டிச் செல்லும்.

தொகுதிச் சுற்றோட்டத் தொகுதி



ஊக்கியாகும்.

2) இரசாயனத் தாக்கத்தில் ஊக்கியின் திணிவிலோ அல்லது இரசாயன அமைப்பிலோ மாற்றம் ஏற்படாது.

3) தாக்க வீதத்தை கூட்டுவது நேருக்கி எனவும் தாக்க வீதத்தை குறைப்பது எதிருக்கி எனவும் அழைக்கப்படும்.

4) ஒட்சிசன் தயாரிப்பிலும் $H_2O_2$ வின்பிரிகையிலும் $mno_2$ நேருக்கி ஆகும்.

2) $H_2O_2$ (ஐதரசன் பர ஒக்சைட்டு பிரிகையில் செறிந்த பொசு போரிக்கமிலம் அல்லதுசெறிந்த சல்பூரிக்கமிலம்எதிருக்கியாகும்.

## 10. வெப்பநிலையில் தாக்கவீதம்:

அ) நோயாளிகளுக்கு நீராகாரம் சிறந்தது என கூறல் அல்லது உணவருந்திய பின் குளிக்காதீர் என எச்சரித்தல்

### விளக்கம்

I சமிபாடு உடல் வெப்பநிலை (98.4°F /36.8°C)ல் தான் சீராக நடைபெறும். எனவே நோயாளிகளில் உடல் வெப்பநிலை கூடவாகையால் சமிபாடு சீராக நடைபெறாது. எனவே திண்ம உணவு சமிபாடு அடைவது கடினம். எனவேதான் நீராகாரம் சிபார்சு செய்யப்படுகிறது.

### விளக்கம் II

உணவருந்திய பின் குளித்தால் நீர் ஆவியாதலுக்குரிய வெப்பம் உடலினால் வழங்கப்பட உடல் வெப்பநிலை குறைய சமிபாடு சீராக நடைபெறாது என்பதனால் உணவருந்திய பின் குளிக்காதீர் என எச்சரிக்கப்படுகிறது.

# பகுதி -B

## விலங்குகளில் கொண்டுசெல்லல்

01. விலங்குகள் உயிர்ப்பு கூடியவை என்பதனால் விலங்குகளில் திறமையான கொண்டு செல்லல் தொகுதி நிறுவப்பட்டுள்ளது. இதுவே குருதிச்சுற்றோட்டத் தொகுதியாகும்.

02. குருதியால் கொண்டு செல்லப்படும் பதார்த்தங்களும் அவை கொண்டு செல்லப்படும் இடங்களும்.

| | | |
|---|---|---|
| ஒட்சிசன் | –> | சுவாசமேற்பரப்பில் இருந்து கலங்களுக்கு |
| காபனீரொட்சைட்டு | –> | கலங்களில் இருந்து சுவாசமேற்பரப்பிற்கு |
| உணவு | –> | சமிபாட்டுத் தொகுதியிலிருந்து கலங்களுக்கு |
| கழிவு | –> | கலங்களில் இருந்து கழிவங்கங்களுக்கு |
| ஓமோன் | –> | சுரக்கப்படும் இடத்தில் இருந்து தொழிற்படும் இடத்திற்கு |


03. குருதியின் தொழில்கள்
1) வாயுப் பரிமாற்றம்
2) உணவை கொண்டு செல்லல்
3) கழிவுகளைக் கொண்டு செல்லல்
4) ஓமோன்களைக் கொண்டு செல்லல்
5) வெப்பநிலையை சீராக்கல்
6) நோயில் இருந்து பாதுகாப்பை வழங்கல்

04. குருதியின் அமைப்பு:
1. கலப்பகுதி 2, திரவ விழையம் என இரு பகுதிகளைக் கொண்டது.
2. செங்குழியம், வெண்குழியம், குருதிச் சிறுதட்டு என மூன்று கலங்கள் காணப்படும்.

தொகுதி காணப்படும்.

05) இதயத்தின் அமைப்பும் தொழிற்பாடும்

(A) அமைப்பு





1. வலதுசோணை அறை
2. இடது ,, ,,
3. இடது இதயவறை
4. வலது இதயவறை
5. முற்பெருநாளம்
6. பிற்பெருநாளம்
7. தொகுதிப்பெருநாடி.
8. சுவாசப்பைநாடி
9. சுவாசப்பைநாளம்
10. முக்கூர் வால்வு
11. இருகூர் வால்வு
12. அரைமதிவால்வு

1) மேலுள்ள அகன்ற பகுதிகள் சோணையறைகள் எனவும் கீழ் உள்ள ஒடுங்கிய அறைகள் இதயவறைகள் எனவும் அழைக்கப்படும்
2) மனித இதயம் நான்கு அறைகளைக் கொண்டது-
1. வலது சோணைஅறை 2. இடது சோணை அறை
3. வலது இதயவறை 4. இடது இதயவறை
3) வலது சோணையறையில் மேற்பெருநாளம், பிற்பெருநாளமும் இடதுசோணையறையில் நான்கு சுவாசப்பை நாளங்களும் காணப்படும்.
4) வலது இதயவறையில் இருந்து சுவாசப்பை நாடியும் இடது இதயவறையில் இருந்து தொகுதிப் பெருநாடியும் ஆரம்பிக்கும்.

(05) வலதுசோணை அறையும் வலது இதய அறையும் தொடர்பு கொள்ளும்துவாரத்தில் முக்கூர்வால்வும், இடது சோணை அறையும் இடது இதயவறையும் தொடர்பு கொள்ளும் பகுதியில் முக்கூர்வால்வும் காணப்படும்.

(06) சுவாசப்பை நாடி தொகுதிப்பெருநாடி ஆரம்பிக்கும் இடத்தில் அரைமதி வால்வு காணப்படும்.

(07) வலது இதயவறைச் சுவரிலும் இடது இதயவறைச் சுவர் தடிப்புக்கூடியது.




1. மேற் பெரு நாளம்
2. பிற் பெரு நாளம்
3. தொகுதிப் பெரு நாடி
4. சுவாசப்பை நாடி
5. சுவாசப்பை நாளம்
6. ஈரல் நாடி
7. ஈரல் நாளம்
8. ஈரல் வாயு நாளம்
9. சிறு நீரக நாடி
10 சிறு நீரக நாளம்

(1) ஈரல் வாயி நாளம் சமிபாட்டுத்தொகுதியில் இருந்து ஈரலிற்கு குருதியைக் கொண்டு செல்லும்
(2) ஈரல்வாயி நாளம் மட்டும் அங்கத்தில் தொடங்கி அங்கத்தில் முடிவதனால் தொடங்கும் போதும் முடியும் போதும் மயிர்த்துழைக் குழாய்களைக் கொண்டிருக்கும். ஏனைய நாடிகள் முடியும் பொழுதும் நாளங்களில் தொடங்கும் பொழுதும் மட்டும் மயிர்த்துழைக் குழாய்கள் காணப்படும்.
(3) ஈரல் நாடியினாலும் நாளத்தினாலும் குருதியைப் பெறும் அங்கம் ஆகும்.
(4)

| பதார்த்தம் | கூடிய செறிவில் உள்ள குருதிக்கலன் |
|---|---|
| $O_2$ | சுவாசப்பை நாடி தவிர ஏனைய நாடிகளிலும் சுவாசப்பை நாளத்திலும் |
| $CO_2$ | சுவாசப்பை நாடியிலும் சுவாசப்பை நாளம் தவிர ஏனைய நாளங்களிலும் |
| யூரியா | ஈரல் நாளம் |
| வெல்லம்)<br>அமினோஅமிலம்) | ஈரல் வாயி நாளம் |

(5) சிறு நீரகத்தில் உள்ள குருதி ஈரலை அடையும் பாதையை ஒழுங்காக கூறினால் பின்வருமாறு அமையும்.
சிறுநீரகம் —> சிறுநீரகநாளம் —> பிற்பெருநாளம்
—> வ. சோ. அறை —> வ. இதயவறை —> சுவாசப்பைநாடி
—> சுவாசப்பை —> சுவாசப்பைநாளம் —> இ.சோ.அறை
—> இ. இதயவறை—> தொகுதிப்பெருநாடி—> ஈரல்நாடி
—> ஈரல்

குறிப்பு;- இவ்வாறு மாணவர்கள் பின்வரும் பாதைகளையும் கண்டறிக.
1. சமிபாட்டுத் தொகுதியில் இருந்து சிறுநீரகத்துக்கு
2. உடலின் கீழ்ப்பகுதியில் இருந்து ஈரலிற்கு

## குருதி வகைகள்

1) A, B, AB, O என நான்கு இனக் குருதியுண்டு
2) ஒவ்வொரு இனத்திலும் Rh காரணி காணப்பட்டால் அது + (Positive) நேர் எனவும் Rh காரணி காணப்படா விட்டால் —

(4ஆம் பக்கம் பார்க்க)

# கணிதம்

# O\L தமிழீழ பொதுக்கல்வி தேர்வுவழிகாட்டி

முன்பு பகுதி II இற்கான முதல் 4வினாக்கள் பற்றிப் பார்த்தோம். இம்முறை ஏனைய வினாக்கள் பற்றிப் பார்ப்போம்.

## வினா 5: கேத்திரகணித அமைப்புகள்

O/L வினாத்தாளிலே அமைப்பு சம்பந்தமான வினா ஒன்று வினவப்படுவதைக் காணலாம். கடந்த கால பரீட்சை வினாத்தாள்களை நன்கு ஆராய்வோமாயின் வட்ட அமைப்புக்கள், பரப்பமைப்புக்கள் போன்ற வினாக்கள் பொதுவாக வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. வட்ட அமைப்புக்களைப் பொறுத்தவரையிலே

(1) முக்கோணி ஒன்றுக்கு சுற்றுவட்டம் அமைத்தல்.

அல்லது

(2) முக்கோணி ஒன்றுக்கு உள்வட்டம் அமைத்தல்.

அல்லது

(3) முக்கோணி ஒன்றுக்கு வெளி வட்டம் அமைத்தல்.

பரப்பமைப்புக்களைப் பொறுத்த வரையில்

(1) முக்கோணி ஒன்றுக்கு சமனான பரப்புடைய முக்கோணி ஒன்று அமைத்தல், அல்லது

(2) நாற்பக்கல் ஒன்றுக்கு சமனான பரப்புடைய முக்கோணி அமைத்தல் போன்ற வினாக்களும் அமைவதைக் காணக்கூடியதாக உள்ளது. மாணவர்கள் இவ் அமைப்பு சம்பந்தமான வினாவிலே சில விடயங்களை நன்கு அவதானிப்பார்களாயின் இவ் வினாவிற்கு இலகுவாக விடையளிக்கலாம்.

★ அமைப்பை வரையத் தொடங்கு முன் பருமட்டான உருவப்படமொன்றை தயாரித்த பின், வரைவோமாயின் குறுகிய நேரத்தில் அதிக பலனைப் பெறலாம்.

★ அமைப்புக் கோடுகள் ஒவ்வொன்றையும் தெளிவாகக் காட்டுதல் வேண்டும். கவராயத்தை பயன்படுத்தியே கோட்டுத்துண்டங்களை அமைத்தல் வேண்டும். உதாரணமாக 8cm நீளமுள்ள கோடு ABயை வரைக எனத் தரப்பட்டால் சில மாணவர்கள் அடிமட்டம் கொண்டு 8cm அளவைக் காட்டுவர். ஆனால் கவராயத்திலே 8cm அளவை எடுத்து ஒரு நேர்கோட்டை வரைந்து கவராயத்திலுள்ள அவ் அளவால் வெட்டுதல் வேண்டும்.

★ அமைப்பு வினாவிலே சில சந்தர்ப்பங்களில் கேத்திர கணிதத்தேற்ற அறிவைப் பயன்படுத்தி கோணங்களை அமைக்க வேண்டியும் வரலாம்.

அரைவட்டக்கோணம் 90° எனும் தேற்றத்தை உபயோகித்து 90° ஐக் காட்டுதல்

உ+ம்

$AB = 7.5cm$, $B\hat{A}D = 75°$, $BD = 9cm$, $B\hat{C}D = 90°$ DC 6cm ஆகவுள்ள நாற்பக்கல் ABCDயை அமைக்க.

இங்கு ஒரு நேர்கோட்டை வரைந்து அந்நேர் கோட்டிலே 7.5cm அளவைக் கவராயத்தில் எடுத்து வெட்டுதல் வேண்டும். பின் A எனும் புள்ளியில் பாகைமானியின் உதவியின்றி 75°ஐ கவராயத்தின் துணைகொண்டு அமைக்க வேண்டும். பின் 9cm அளவைக் கவராயத்தில் எடுத்து B இல் வைத்து வெட்டும்போது 75° கோட்டை வெட்டும் இடம் D ஆகும்.

$B\hat{C}D = 90°$ ஐ அமைப்பதற்கு DBயை விட்டமாகக் கொண்டு ஒரு அரைவட்டம் வரைந்து அதிலே Dஇல் இருந்து 6cm தூரத்தில் வெட்டும் போது C எனும் புள்ளியைப் பெறலாம்.

★ ஒழுக்கு சம்பந்தமான அறிவைப் பயன்படுத்தி அமைப்புக்களைச் செய்யவேண்டியும் வரலாம்.

உ+ம் 1) இரு புள்ளிகளிலிருந்து சமதூரத்தில் நக

2) இரு சமாந்தரமற்ற நேர்கோடுகளில் இருந்து சமதூரத்தில் நகரும் புள்ளியின் ஒழுக்கு, அவ் இரு நேர்கோடுகளாலும் ஆக்கப்படும் கோணத்தின் இருகூறாக்கி போன்ற மேற்படி விடயங்களை நன்கு அவதானித்து அமைப்பு வினாவிற்கு விடையளித்தல் வேண்டும்.

★ அமைப்பு வினாவில் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் புள்ளிகள் வழங்கப்படுவதை புள்ளியிடல் திட்டம் காட்டுகின்றது.

உ+ம்:-

(I) $PQ = 6.5cm$, $P\hat{Q}R = 120°$, $QR = 8.5cm$, $PS \parallel QR$ $PS = 5cm$ ஆகவுள்ள நாற்பக்கல் PQRS ஐ அமைக்க உமது அமைப்பைத் தொடங்கு முன் பருமட்டான படம் ஒன்று வரைக.

(ii) RS ஐ அளந்து பெறுமானத்தை எழுதுக.

(iii) QR, QS என்பவற்றில் இருந்து சமதூரத்தே இருக்குமாறு SR மீதுள்ள புள்ளி Nஇன் இட அமைவைக் குறிக்க.

(iv) NR ஐ அளந்து அதன் பெறுமானத்தை எழுதுக

(v) முக்கோணி QRS இன் பக்கங்களைத் தொடுகின்ற வட்டத்தை அமைக்க.

(vi) மேற்குறிப்பிட்ட வட்டத்தின் ஆரையை எழுதுக

புள்ளியிடல் திட்டம்:

(i) பருமட்டான படம் ------ 1
$PQ = 6.5$ cm அமைத்தல் ----- 1
$P\hat{Q}R = 120°$ அமைத்தல் ----- 1
$QR = 8.5cm$ அமைத்தல் ----- 1
QR//PS வரைதல் ------- 1
S ஐக் குறித்தல் ------- 1
PQRSஐ பூரணமாக்கல் ------ 1

(ii) $RS = 8.8$ cm ----- 1

(iii) புள்ளி N ஐ குறிக்க $S\hat{Q}R$ ஐ இரு கூறிடுதல் ----- 1

(iv) $NR = 5.1$ cm ----- 1

(v) மையத்தைப்பெற △ SQRஇன் மற்றொரு கோணத்தை இரு கூறிடுதல் ----- 1
மையத்தைப் பெறல் ------ 1

(vi) ஆரை பெற செங்குத்து அமைத்தல் ----- 1

(vii) ஆரை = 2 cm ------ 1

## வினா 6 :

இலாபநட்ட நூற்றுவீதம், வரி, எளியவட்டி, கூட்டுவட்டி, அன்னியச் செலாவணி, பங்குகள், கடன்கள், வாடகைக் கொள்வனவு போன்ற பகுதிகளிலே ஏதேனும் ஒன்றைக் கொண்டதாக ஒரு வினா வருவதைக் காணலாம். இப்பகுதிகள் ஆண்டு 10 ஆண்டு 11 பாடத்திட்டத்தை உள்ளடக்கியது. மேற்படி பகுதிகளை பரீட்சை வினாத்தாள்களை அடிப்படையாகக் கொண்டு பயிற்சி எடுப்பீர்களாயின் இப் பகுதியை இலகுவாகச் செய்து முடித்துவிடலாம்.

## வினா 7,9:- கேத்திர கணிதம்

வினாத்தாளில் கேத்திரகணிதத்தை அடிப்படையாகக் கொண்டு இரண்டு வினாக்கள் வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. அதில் ஒன்று வட்டத் தேற்றங்களைச் சம்பந்தப்படுத்திய வினாவும், மற்றையது ஆண்டு 9தொடக்கம் ஆண்டு 11 வரையிலான பாடத்திட்டத்திலுள்ள கேத்திரகணித வினாவும் அமைகின்றது. கேத்திரகணித வினாவிற்கு விடையளிக்கும் போது சில விடயங்களை நன்கு கவனித்து விடையளிக்க வேண்டும்.

(1) கேத்திரகணித நிறுவலை நிறுவுவதற்கு முன் தரப்பட்ட எல்லாத் தரவுகளையும் படங்களிலே குறித்தல் வேண்டும். பின் அமைப்பு உண்டெனின் அதையும் படத்திலே காட்டி தரவுகளைக் கொண்டு வினவப்பட்ட வினாவிற்கு விடையளிக்கக்கூடியதாக உள்ளதா? என அவதானிக்க வேண்டும்.

(2) தரவு, நிறுவவேண்டியது, கருவி [இருப்பின்]

(3) படத்திலே ஆங்கில எழுத்துக்களைக் குறித்து நிறுவல்களைப் 'படத்தின்படி' நிறுவலாம். ஒவ்வொரு விடயமும் எழுதும்போது (முக்கியம் கணிப்பீடுகளாயின்) காரணங்களை எழுதிக் காட்டுதல் வேண்டும்.

## வினா 8:- புள்ளிவிபர இயல்

கடந்த காலப் பரீட்சை வினாத்தாளை ஆராயின் இவ் வினா ஒரே மாதிரியான அமைப்பைக் கொண்டதாக அமைவதைக் காணலாம். மெல்லக் கற்கும் மாணவர்களுக்கும் புள்ளிகளை இலகுவாகப் பெற்றுத்தரக் கூடியதாக இவ்வினா அமைகின்றது. ஏதேனும் ஒரு புள்ளிப்பரம்பலுக்கான அட்டவணை ஒன்று தரப்படின் அதிலே உத்தேசித்த இடையைக் கொண்டு இடையைக் காணும்படி ஒரு வினா அமையும். உத்தேசித்த இடையைக் கொண்டு இடையைக் காணும்படி கேட்கும் போது அவ் இடை உண்மை இடையையே கருதுகின்றது.

உண்மை இடை - உத்தேசித்த இடை + விலகல் இடை ஆகும். ஆகவே இவ் வினாவுக்கு விடையளிக்க விலகலைக் சம்பந்தப்படுத்தி அட்டவணையைத் தயார் செய்து அதிலிருந்து விலகல் இடையைக் காணல் வேண்டும்.

$$\text{விலகல் இடை} = \frac{\text{விலகல் மொத்தத் தொகை}}{\text{மீடிறன் மொத்தத்தொகை}}$$

அட்டவணையைத் தயார் செய்து உண்மை இடையைக் காணும் இச்செயற்பாட்டிற்கு 8 புள்ளிகள் வழங்கப்படுகின்றது. மீதிப்புள்ளிகளுக்கு சில சிறு வினாக்கள் அமைந்திருக்கும். சில சந்தர்ப்பங்களிலே ஒரு பகுதி வினாவாக காலணைகள் சம்பந்தமான வினா அமையலாம். 1993ஆம் ஆண்டு வினாத்தாளை அவதானிப்பின் ஒரு பகுதி வினாவாக வலையுருவரையம் அமைந்திருப்பதைக் காணலாம். மாணவர்கள் புள்ளிவிபர இயலில் ஓரிரு உதாரணக் கணக்குகளை மட்டும் நன்றாக விளங்கிச் செய்தாலே பரீட்சைக்கு அமையும் புள்ளிவிபரவியல் வினாவை இலகுவாக முழுமையாகச் செய்து முடிக்கலாம்.

## வினா 10:- கூட்டல் விருத்தி, பெருக்கல் விருத்தி

கூட்டல்விருத்தி, பெருக்கல்விருத்தி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி ஒரு வினா அமையும். கணக்கை அவதானித்து உறுப்புக்கள் சம்பந்தப்பட்ட வினா எனின் அதற்குரிய வாய்ப்பாட்டையும் உபயோகிக்க வேண்டும். கூட்டல்விருத்தியில் உறுப்புக்களைக் காண உதவும் வாய்ப்பாடு $T_n = a + (n-1)d$, பெருக்கல் விருத்தியில் உறுப்புக்களைக் காண உதவும் வாய்ப்பாடு $T_n = ar^{(n-1)}$ ஆகும். கூட்டுத்தொகை சம்பந்தப்பட்டிருப்பின் அதற்குரிய வாய்ப்பாட்டையும் பயன்படுத்த வேண்டும்.

கூட்டல்விருத்தியில் nஆம் உறுப்பின் கூட்டுத் தொகை

$$S_n = \frac{n}{2}(a + l)$$

$$S_n = \frac{n}{2}(2a + (n-1)d)$$

பெருக்கல் விருத்தியில் nஆம் உறுப்பின் கூட்டுத் தொகைக்குரிய வாய்ப்பாடு

$$S_n = \frac{a(1 - r^n)}{1 - r} \quad \text{இங்கு } 1 > r \text{ ஆயுள்ள போது}$$

$$S_n = \frac{a(r^n - 1)}{r - 1} \quad \text{இங்கு } r > 1 \text{ ஆயுள்ள போது}$$

## வினா 11: அளவியல்

அளவியல் வினாவிற்கு விடையளிக்கும் போது உருவங்கள் தரப்பட்டிருந்தால் கணக்கை நன்றாக வாசித்து விளங்கிய பின் விடையளித்தல் வேண்டும். படங்களை பார்த்து விட்டு உடனே கணக்கை செய்ய பார்த்து விளங்குவது கடினமாக இருக்கும். எனவே முழுத்தரவையும் கவனமாக வாசித்து விடுபட்ட தரவுகளைப் படங்களிலே குறித்த பின் கணக்கை செய்தல் வேண்டும்.

அளவியல் வினாவுக்கு சில சந்தர்ப்பங்களிலே வினாவுக்கு கீழே சம்பந்தப்பட்ட உருவங்களின் பரப்பு, கனவளவுகள் சம்பந்தப்பட்ட வாய்ப்பாடுகள் தரப்பட்டிருக்கும் அவ்வாய்ப்பாட்டை பயன்படுத்தலாம். ஆனால் வினவப்பட்ட வினாவுக்கேற்ப வாய்ப்பாட்டை பிரயோகிக்க வேண்டும். உதாரணமாக கோளமொன்றின் கனவளவுக்கான வாய்ப்பாடு கணக்கிலே தரப்பட்டிருந்து அரைக்கோளத்தின் கனவளவு வினாவப்பட்டிருந்தால் கோளத்தின் கனவளவிற்கான வாய்ப்பாட்டை 2 ஆல் வகுத்து விடையளிக்க வேண்டும். சில சந்தர்ப்பங்களிலே சீரான உருவங்களின் குறுக்கு வெட்டுப்படம் தரப்பட்டிருக்கும். ஆகவே கணக்கை முழுமையாக வாசித்து அவ் உருவை விளங்கியபின் விடையளிக்க வேண்டும்.

உ+ம்:-

ஒரு கொங்றீட் கல்லின் குறுக்கு வெட்டு அளவுகள் 20 CM × 15 CM ஆகும். இக்கல்லின் குறுக்கு முகத்திலே 7 CM விட்டமுள்ள துளை ஒன்று இடப்பட்டுள்ளது துளையுள்ள கல்லின் நீளம் 25 CM ஆயின் கல்லின் கனவளவைக் காண்க.

குறுக்கு வெட்டுப்பரப்பு $= 20 \times 15 - \pi r^2$
$= 300 - \frac{22}{7} \times \frac{7}{2} \times \frac{7}{2}$
$= 300 - 38.5$
$= 261.5 \text{ CM}^2$

∴ கல்லின் கனவளவு = குறுக்கு முகப்பரப்பு × கல்லின் நீளம்
$= 261.5 \times 25$
$= 6537.5 \text{ CM}^3$

## வினா 12. திரிகோண கணிதம்

ஆண்டு 10இல் இருந்து திரிகோணகணிதம் எனும் பாடம் தொடங்குகின்றது. திரிகோணகணித வினாவுக்கு விடையளிக்கும் போது அவதானமாக கணக்கை வாசித்து படத்தை வரைந்தபின் கணக்கை செய்தல் வேண்டும். மாணவர்கள் ஏற்ற கோணங்கள், இறக்கக்கோணங்கள் குறிக்கும்போது பிழை விடுவதை அனுபவ வாயிலாகக் காணக்கூடியதாக உள்ளது. எனவே இவ் ஏற்ற இறக்க கோணங்களை சரியாகக் குறிக்கப் பயிற்சி எடுத்தல் நன்று. சில சந்தர்ப்பங்களிலே படங்கள் கணக்கிலே தரப்பட்டிருக்கும். அவ்விதம் படம் தரப்பட்டிருந்தால் கணக்கை வாசித்து விடுபட்ட தரவுகளைப் படங்களிலே குறித்தபின்பு செய்தல் வேண்டும். திரிகோண கணித வினாவுக்கு விடையளிக்க மடக்கை வாய்ப்பாடு உபயோக்கிக்க வேண்டி வரும். எனவே ஒவ்வொன்றுக்கும் மடக்கைச் செய்கைகளைக் கவனமாகச் செய்தல் வேண்டும். திசைகோள் சம்பந்தப்பட்ட வினாவும் தரப்படலாம். 12ஆவது வினாவிலே ஒருபகுதி வினாவாக அளவிடைப்படம் சம்பந்தப்பட்ட வினாவும் தரப்படலாம். திரிகோணகணித விகிதங்களை பயன்படுத்தி விடைதரும்படி கூறப்பட்டிருப்பின் அளவிடைப்படங்களைக் கொண்ட வினாவுக்கோ அல்லது பைதகரஸ் தேற்றம் என்பவற்றைப் பயன்படுத்தி விடையளித்தாலோ புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதைக் கவனத்திலே கொள்ளவேண்டும்.

தமிழீழப் பொதுத்தேர்வு பரீட்சைக்கு தயாராகி இருக்கும் மாணவர்களைக் கருத்திலே கொண்டு பகுதி I, பகுதி II இற்கான வினாத்தாள் பற்றி ஒரு சுருக்கமான விளக்கமொன்றை அளித்தேன். மேலே உங்களுக்கு அளிக்கப்பட்ட விளக்கங்கள் பரீட்சைக்கான ஒரு வழிகாட்டியே, இதில் தரப்பட்ட வினாவிடைகள் போன்று பரீட்சைக்கு வரும் என

ல. சதீஸ்குமார்
ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி

BCD = 90 ஐ அமைப்பதற்கு DBயை விட்ட
மாகக் கொண்டு ஒரு அரைவட்டம் வரைந்து அதிலே Dஇல் இருந்து 6cm தூரத்தில் வெட்டும் போது C எனும் புள்ளியைப் பெறலாம்.

★ ஒழுக்கு சம்பந்தமான அறிவைப் பயன்படுத்தி அமைப்புக்களைச் செய்யவேண்டியும் வரலாம்.

உ+ம் 1) இரு புள்ளிகளிலிருந்து சமதூரத்தில் நகரும் புள்ளியின் ஒழுக்கு அவ் இரு புள்ளிகளையும் இணைக்கும் நேர்கோட்டின் இருசம வெட்டிச் செங்குத்தாகும்.

(1) கேத்திரகணித நிறுவலை நிறுவுவதற்கு முன் தரப்பட்ட எல்லாத் தரவுகளையும் படங்களிலே குறித்தல் வேண்டும். பின் அமைப்பு உண்டெனின் அதையும் படத்திலே காட்டி தரவுகளைக் கொண்டு வினவப்பட்ட வினாவிற்கு விடையளிக்கக்கூடியதாக உள்ளதா? என அவதானிக்க வேண்டும்.

(2) தரவு, நிறுவவேண்டியது, கருவி [இருப்பின்] போன்றவிடயங்களை எழுதுதல்வேண்டும். இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப்படுகின்றது.

## வினா 11: அளவியல்

அளவியல் வினாவிற்கு விடையளிக்கும் போது உருவங்கள் தரப்பட்டிருந்தால் கணக்கை நன்றாக வாசித்து விளங்கிய பின் விடையளித்தல் வேண்டும். படங்களை பார்த்துவிட்டு உடனே கணக்கை செய்ய ஆரம்பித்தல் கூடாது. ஏனெனில் சில சந்தர்ப்பங்களிலே படத்திலே சில தரவுகள் காட்டப்படாமல் இருக்கலாம். சில சந்தர்ப்பங்களிலே படத்தைப்

தமிழீழப் பொதுத்தேர்வு பரீட்சைக்கு தயாராகி இருக்கும் பாணவர்களைக் கருத்திலே கொண்டு பகுதி I, பகுதி II இற்கான வினாத்தாள் பற்றி ஒரு சுருக்கமான விளக்கமொன்றை அளித்தேன். மேலே உங்களுக்கு அளிக்கப்பட்ட விளக்கங்கள் பரீட்சைக்கான ஒரு வழிகாட்டியே, இதில் தரப்பட்ட வினாவிடைகள் போன்று பரீட்சைக்கு வரும் என கருதிக்கொள்ளக் கூடாது. மாணவர்கள் வினா அமைப்பை விளங்கிக் கணிதபாடத்திலே அதிவிசேட சித்தி பெறவேண்டும் என்பதே என் அவா.

# விஞ்ஞானம்

(            ) எதிர்க்குருதி எனவும் அழைக்கப்படும்.

தறிப்பு;- A+ குருதி எனில் A இனத்தில் Rh காரணியை கொண்டது
A- ,, ,, A ,, Rh காரணி இல்லாதது.

3) குருதி இனம் வாங்கும் குருதி வழங்கும் குருதி

| குருதி இனம் | வாங்கும் குருதி | வழங்கும் குருதி |
|---|---|---|
| A | A, O | A, AB |
| B | B, O | B, AB |
| AB | A, B, AB, O | AB |
| O | O | A, B, AB, O |

AB - சர்வ வாங்கி O - சர்வ வழங்கி

### குருதிநோய்கள்

1. குருதியமுக்கம்
நாடிகளில் கொழுப்பு படிந்து நாடி மீள்தன்மையை இழப்பதால் ஏற்படும்.
2. குருதிச்சோகை
   1. செங்குழியம் குறைவால் அல்லது வெண்குழியம் அதிகரிப்பால் ஏற்படும்.
   2. குருதிப்பெருக்கு, உணவுடன் நஞ்சு கலத்தல் போன்ற காரணங்களால் செங்குழியம் குறைந்து குருதிச்சோகை சாதாரணமாக ஏற்படும். இது இலூக்கோபீனியா எனப்படும்.
   3. வெண்குழியம் அதிகரித்தலால் குருதிச்சோகை ஏற்படும் இது இரத்தப் புற்றுநோய் (            ) எனப்படும். இது இலூக்கேமியா எனப்படும்.

### எடீமா

(1) இழையப்பாய் பொருள் அதிகரிப்பதனால் இந்நோய் ஏற்படும்.
(2) கண்ணிமைகளின் கீழ்ப்பகுதி கணுக்கள் போன்றவற்றில் ஏற்படும் வீக்கத்தில் நசிக்கும் பொழுது ஏற்படும் பள்ளம் மீள நீண்ட நேரம் எடுக்கும்.

### ஈமோபிலியா (குருதியுறையா நோய்)

(1) இந்நோய் உள்ளவர்களில் உடலில் இருந்து வெளியேறும் குருதி உறையாது அல்லது உறைய நீண்ட நேரம் எடுக்கும்.
(2) இது பரம்பரையாக ஏற்படும் நோயாகும்.
(3) விற்றமின் K குறைவாலும் ஏற்படும்.

### நிணநீரும் நிணநீர்த் தொகுதியும்

(1) மேலதிக இழையப்பாய் பொருளே நிணநீராகும்.
2) மீண்டும் நிணநீர் குருதிச் சுற்றோட்டத் தொகுதியை அடையும்.
3) நிணநீர் பாய்ந்து செல்லும் சிறுகுழாய்களைக் கொண்ட தொகுதியே நிணநீர்த் தொகுதியாகும். இது உடல் முழுதும் பரந்து காணப்படும்.
4) நிணநீர்த் தொகுதியில் இரு பெரும் நிணநீர்க்கலன்கள் காணப்படும் அவையாவன, 1. நெஞ்சறைக்கான்
2. வலது நிணநீர்க்கான்
5) இவை முறையே இடது காறையென்பு கீழ் நாளத்திலும் வலது காறையென்பு கீழ் நாளத்திலும் திறக்கின்றன.
6) நிணநீர்த் தொகுதியில் சிறு கணுக்கள் காணப்படும். இக்கணுக்கள் தொற்று ஏற்படும் சந்தர்ப்பங்களில் வீங்கி நெறிகளைத் தோற்றுவிக்கும்.

### மேலும் சில குறிப்புகள்

(1) குருதிச் சுற்றோட்டத்தை கண்டுபிடித்தவர் ''வில்லியம் ஹார்வே''
(2) குருதியினங்களைக் கண்டுபிடித்தவர் ''லான்ட்ஸ்ரைனர்',
(3) சோடியம் ஒட்சலேற்று என்னும் பதார்த்தம் குருதி உறைதலைத் தடுக்கும்
(4) இருகூர்வால்வே மைற்றர் வால்வு எனப்படும்
(5) மனிதனில் 5. 5 லீற்றர் குருதி உண்டு

## 30-05-94-ல் வெளியிடப்பட்ட மாணவர் சிந்தனைக்குரிய பகுதியின் விடைகள்

1. புதிய கள்ளு இனிப்பது அதில் சுக்குரோசு என்னும் வெல்லம் காணப்படுவதனால் ஆகும்.
2. கள்ளு வெறிப்பதற்கு அதில் எதையில் அற்ககோல் காணப்படுதல் ஆகும்.
3. கள்ளின் புளிப்புச் சுவைக்கு அதில் அசற்றிக் அமிலம் காணப்படுதல் ஆகும்.
4. பாண்பொங்குவதற்கு மதுவத்தின் தொழிற்பாடே காரணமாகும் மதுவம் வெல்ல ஊடகத்திலேயே சிறப்பாக தொழிற்படும். எனவேதான் சீனி தட்டுப்பாடாயின் பாண்தயாரிப்பில் மதுவம் சிறப்பாக தொழிற்படாமையால் அது பொங்குவதில்லை.
5. சிரித்தல் வெளிச்சுவாசத்தின் திரிபாகும். எனவே பலமாக தொடர்ந்து சிரித்தால் பிரிமென்தகடு விரைவாக தொழிற்படுவதனால் வயிற்றுத் தசைகளுக்கு ஒட்சிசன் விநியோகம் போதாமையால் அத்தசைக் கலங்களில் இலத்திக்கமிலம் தோற்றுவிக்கப்படும். இதனால் தசைப்பிடிப்பு ஏற்பட வயிற்றில் நோவு ஏற்படுகிறது.
6. சாப்பிடும் பொழுது சிரித்தால் வாதனாளியில்உள்ள மூச்சுக்குழல் வாய் மூடி திறபட வாதனாளியினுள் உணவு செல்லும் இதை வெளியேற்ற சுவாசப்பை சடுதியாக சுருங்க புரக்கேறும் இதனாலேயே சாப்பிடும் பொழுது சிரிக்காதீரென எச்சரிக்கப்படுகிறது
7. மேலதிக உடற்பயிற்சி செய்யும்பொழுது தசைக்கலங்களிற்கு வழங்கப்படும் ஒட்சிசன் போதாமையால் தசைக்கலங்களில் இலத்திக்கமிலம் உடைபடாது இருப்பதனால் தசைப்பிடிப்பு ஏற்படுகின்றது
8. தசைப்பிடிப்பு ஏற்பட்ட இடத்தை உருவும்பொழுது வெப்பத்தால் குருதிக்குழாய்கள் விரிவடைய குருதி கூடியளவு வழங்கப்பட கூடியளவு ஒட்சிசன் வழங்கப்பட இலத்திக்கமிலம் உடைபட தசைப்பிடிப்பு குணமடையும்
9. மண்புழுவின் சுவாச மேற்பரப்பு தோல் ஆகும். சுவாச மேற்பரப்பு ஈரலிப்பாக காணப்பட்டாலே வாயுப்பரிமாற்றம் நடைபெறும் வெய்யிலில் இட்டால் தோலில் ஈரலிப்பு அற்றுப்போக சுவாசிக்க முடியாது இறந்துவிடும்.
10 கரப்பானின் சுவாச மேற்பரப்பு புன்வாதனாளியாகும். இது உடலின் பக்கத்திலேயே காணப்படும் எனவே உடலை நீரினுள் அமிழ்த்தினால் வளி உட்செல்ல முடியாமையால் அது இறக்கிறது.


**இந்த விளம்பரத்தைப் பார்க்காதீர்கள்!**
**ஆனால் வாசியுங்கள்!!!**

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா, நல்லூர் திருவிழாவை முன்னிட்டு விரதசுத்த போசன உணவுப் பார்சல்களை காலை 11.30 மணி முதல் பிற்பகல் 3-30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். தாமதமோ! தடையோ இல்லை.

ரூபா 25/ மட்டுமே

ஜோ. எகட்டனின்
**ஜெசித்தாரா**
**உள்ளூர் விருந்தகம்**

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
கொழும்புத்துறைச் சாலை, சுண்டுக்குளி.
வழமையான உணவுப் பார்சல்களும் கிடைக்கும்.

ரூபா 30/-

புதுயுகத்தில் புது உருவம்
**ஜெசித்தாரா**

(சி-10094)



**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ - து)**

**விசேட பொதுக் கூட்டம்**

மேற்படி கூட்டம் 1994-08-28-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணியளவில் யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கூட்ட அறிவித்தல் அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இடம் பெயர்ந்தும் சமாசத்துடன் தொடர்பில்லாமலும் இருக்கும் அங்கத்துவ சங்கங்கள் கூட்ட அறிவித்தலையும், பொதுச்சபை பிரதிநிதிக்கான அதிகாரக் கடிதத்தையும் சமாசக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

182¼ ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பதில் மாவட்ட செயலாளர்.
யாழ். மா.சி.க.கூ.ச சமாசம்.

(சி-10109)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு..

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

- திருக்குறள்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 14-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 03

# புலிகள் புகட்டியுள்ள மற்றுமொரு பாடம்

கிழக்கு மாகாணத்தில், கட்டுமுறிப்புக்குளம் இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் சிறிலங்கா இராணுவ - அரசியல் வட்டாரங்களில் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தி இருக்கும் என்பதில் சந்தேகப்பட எதுவுமில்லை. அதுவும் பொதுத் தேர்தலுக்கு சில தினங்கள் இருக்கையில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலானது தேர்தலை எந்தளவிற்குப் பாதிக்கும் என்பதை விட, தேர்தலின் பின் ஆட்சிக்கு வரப் போகின்றவர்களுக்கான ஒரு முன்னெச்சரிக்கை என்பதே முக்கியமானதாகும்.

கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலத்தில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொள்ளாமல் இருந்தமை, சிறிலங்கா இராணுவ - அரசியல் வட்டாரங்களில், கிழக்கு முற்றாக விடுதலைப் புலிகளிடம் இருந்து பறிக்கப்பட்டு விட்டது / சிங்கள இராணுவத்தால் வெற்றி கொள்ளப்பட்டு விட்டது என்றே எண்ணப்பட்டது. சிறிலங்கா ஜனாதிபதி போன்றவர்களும் கிழக்கு முற்றாக 'விடுவிக்கப்பட்டு' விட்டது, அடுத்தது வடக்குத்தான் எனத் தெரிவித்துவந்தனர்.

கடந்த வாரம் அக்குரஸைப் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி டி பி. விஜேதுங்கா இதனை வெளிப்படுத்துமாப்போல், ''ஐக்கிய தேசியக் கட்சி புதிய அரசாங்கத்தை அமைத்ததும், வடபகுதியைப் புலிகளின் பிடியில் இருந்து மூன்று மாதத்திற்குள் விடுவித்து விடுவேன்'' எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில்தான், விடுதலைப்புலிகள் இயக்கம் கிழக்கு மாகாணத்தில் கட்டுமுறிப்புக்குள இராணுவ முகாம் மீதான தாக்குதல் முக்கியம் பெறுகின்றது. ஏனெனில், விடுதலைப் புலிகளிடம் இருந்து 'விடுவிக்கப்பட்ட பகுதிக்குள்' நடந்த தாக்குதல் என்பதால் மட்டுமல்ல, ஒரு முகாம் தாக்கி அழிக்கப்பட்டது முக்கியம் பெறுகின்றது.

அதாவது, இத்தாக்குதலானது ரோந்து அணிகள் மீதோ! அன்றி முகாம்களுக்கு பாதுகாப்பாயிருக்க முன்

# வடக்கு - கிழக்கு இணைப்பை பாராளுமன்றம் மூலம் நீக்கலாம்

## பொ. ஐ. மு. சட்ட ஆலோசகர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு இணைப்பை ரத்துச்செய்வதற்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று அரசியலமைப்பு விவகார அமைச்சர் கே. என். சொக்ஸி கூறியிருப்பதை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சட்ட ஆலோசகரும், தேசியப் பட்டியல் வேட்பாளரும், பேராசிரியருமான ஜி. எல். பீரிஸ் மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், பாராளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மை மூலம் வடக்கு, கிழக்கு இணைப்பை ரத்துச்செய்வதற்கு மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் இடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு இணைப்பை ரத்துச்செய்வதற்கு சர்வசன வாக்கெடுப்பு தேவை என்ற கே. என். சொக்ஸியின் கூற்று ஐ தே. கவின் இயலாமையை காட்டுகிறது; பொய்யானது.

ஐ தே க ஆட்சியில் ஜனாதிபதிகளாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர் பிரேமதாசா, மற்றும் டி. பி. விஜேதுங்கா போன்றோர் வடக்கு, கிழக்கு இணைப்பை அரசியல் லாபங்களுக்காக துண்டிக்காது இருந்துள்ளனர் என மேலும் அவர் தெரிவித்தார்.

# நாட்டைப் பிரித்தாலும் சதாகாலமும் சண்டையே தொடர்ந்து நடைபெறும்

## எல்லைப் பிரச்சினை வருமென்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

இன விகிதாசாரப்படி நாட்டைப் பிரித்தால் சதாகாலமும் சண்டையே நடக்கும், வடக்கிலுள்ள புற்றுநோயை நான் நன்றாக அறிவேன். இந்தச் சிறிய நாட்டைப் பிரித்துக் கொடுத்தால் எமக்குப் போவதற்கு வேறு நாடு எதுவுமில்லை என ஜனாதிபதி டி, பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடு பிரிக்கப்பட்டால் சனத் தொகை கூடும்போது எல்லைப் பிரச்சினை ஏற்பட்டு சதாகாலமும் சண்டையேற்பட்டு படுகொலைகள் தொடர்ந்து கொண்டே இருக்கும். பூகோள ரீதியில் எல்லையைப் பிரிப்பதாயின் மூன்றிலிரண்டு பங்கு அறுதிப் பெரும்பான்மை பெற்று பாராளுமன்றத்தின் அங்கிகாரத்தைப் பெறவேண்டும். ஜனாதிபதியினால் கூட இதனை மாற்றியமைக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

ஒரு போதும் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியினருக்கு சந்தர்ப்பம் கிடைக்காது. கிடைத்தாலும் அதனை அவர்களால் தீர்க்க முடியாது எனவும் அப் பிரசாரக் கூட்டத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

## பிரசாரங்கள் முடிவு

சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான பிரசாரங்கள் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்தன. இத்தேர்தலில் 13 அரசியல் கட்சிகளும், 26 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. 225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 196 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான இத்தேர்தலில் 1449 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

# முன்னாள் ராணுவ தளபதி சிசில் கொழும்பு வந்தார்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன கொழும்பு திரும்பி இருப்பதாகவும் இவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும் ''ராவய'' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

தற்போது வெளிநாடொன்றில் தூதுவராகக் கடமையாற்றி வரும் இவர் திடீர் என நாடு திரும்பியதாகவும் நடைபெறவுள்ள தேர்தலின் போது ஏற்படக் கூடிய கலவரம் தொடர்பாக இவரின் உதவியைப் பெறும் பொருட்டு இவர் அழைக்கப்பட்டு இருக்கலாம் என தான் எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளால் பூநகரி கூட்டுப்படை தளம்தகர்ப்பின் போது ஏற்பட்ட கருத்து வேற்றுமையைத் தொடர்ந்து இவர் தனது பதவியை இராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல்பற்றிய அறிக்கை வெள்ளியன்று வெளிவரும்

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் பற்றிய முழுமையான அறிக்கையை எதிர்வரும் வெள்ளிக்கிழமை சமர்ப்பிக்க முடியும் என சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவரான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மக்லண்ட் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மகாநாடு ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இன்று சகல மாவட்டங்களுக்கும் சர்

# பொருள்கள் விற்பனை

## முல்லை

வேலி)

வீரச்சாவடைந்த இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.



கப்டன் தேவன் (இளங்குமணன்)



லெப். மன்மதன் (அஜீத்)



2ம் லெப் செல்வக்குமரன் (பல்லவன்)

## தேர்தல்

சேர்ந்த பிரதிநிதிகள் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் டாக்டர் காமினி

## தற்கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் சித்தாண்டிப் பகுதியில் இராணுவ முகாம் ஒன்றில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னிடமிருந்த துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை புரிந்து கொண்டார். கடந்த திங்கள் இரவு இச் சம்பவம் இடம்பெற்றது.

குருநாகலைச் சேர்ந்த காரியவாசம் என்னும் இராணுவச் சிப்பாயே இவ்விதம் தற்கொலை செய்து கொண்டவராவார்.

## குடாநாட்டின்

பகுதியில் வீழ்ந்த எறிகணையால் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார்.

## மக்கள் இடம்பெயர்வு

நேற்று நண்பகல் முதல் சிறிலங்கா இராணுவத்தினர் பரவலாக மேற்கொண்ட தொடர்ச்சியான, எறிகணைத் தாக்குதல்களுக்கு அஞ்சி பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து ஆலயங்களிலும், பாடசாலைகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

அச்சுவேலிப் பகுதி தோப்பு கொலனியைச் சேர்ந்த 50 குடும்பங்கள் உட்பட ஆயிரக் கணக்கானோர் இடம்பெயர்ந்து ஆவரங்கால் சிவன் கோவிலிலும் கரதடி ஆலயத்திலும் புத்தூர் புத்தகலட்டி பகுதிகளிலும் தங்கியுள்ளனர்.

## அச்சுவேலி

அச்சுவேலி தோப்பு கொலனி மக்கள் குடியேற்றத் திட்டத்தினுள் வீழ்ந்து வெடித்த எறிகணைகளால் நிறைமாதக் கர்ப்பிணி உட்பட ஐவர் ஸ்தலத்திலேயே சிதறிப் பலியானார்கள்.

இவ் எறிகணைத் தாக்குதல்களினால் நிறைமாதக் கர்ப்பிணியான இந்திரன் லீலா மற்றும் இவரது மகளான இந்திரன் உஷா (வயது 2) மற்றும் லீலாவின் சகோதரர்களான வனிதா, அகிலன் மற்றும் தாயாரான சின்னத்தம்பி லட்சுமி ஆகியோரே சிதறிப் பலியானவர்களாவர்.

இச் சம்பவத்தின் போது அங்கு சென்ற சுந்தரம் தவராசா (வயது 19) என்பவரும் எறிகணையில் சிக்கி ஒரு காலை இழந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைக்கு உட்படுத்திய சில மணி நேரத்திற்குள் மரணமானார்.

இச்சம்பவங்களின் போது காயமடைந்த பத்து பேரினது பெயர் விபரம் வருமாறு:

இந்திரன் சாந்தினி (வயது 8) எஸ் அருணாசலம் (வயது 58), ரி. செல்வகாந்தன் (வயது 28), ரி தங்கவேலு

பெறுகின்றது.

அதாவது, இத்தாக்குதலானது ரோந்து அணிகள் மீதோ அன்றி முகாம்களுக்கு பாதுகாப்பாயிருந்த முன்னணிக் காவல் அரண்கள் மீதோ நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. முழுமையான இராணுவ முகாம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகும். இந்த வகையில் கிழக்கில் விடுதலைப் புலிகளின் பலம் வெளிக்காட்டப்பட்டுள்ளதோடு, அரசாங்கத்தின் பொய்ப் பிரசாரமும் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

இதேபோன்றே, வடக்கிலும் அண்மையில் மேற்கொண்ட தாக்குதல்கள் சில சிறிலங்கா இராணுவத்தின் 'விடுவிக்கப்பட்ட' பகுதியினரின் பாதுகாப்பு குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளது. இதில் மன்னார்த் தீவினுள் கடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிகளின் கொமாண்டோப் பிரிவு மேற்கொண்ட தாக்குதல் முக்கியமானது.

இதன் முக்கியத்துவம், மிகவும் பாதுகாப்பு மிக்க மன்னார் நகரை அண்டிய பகுதியில் பகல் வேளையில் நடத்திய தாக்குதல் என்பதோடு, 'முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள்' இருக்கும் தீவிற்குள் புலிகள் பேருந்தில் சென்று தாக்குதல் நடத்தியதாகும்.

இந்தவகையில், கிழக்கிலும் சரி, வடக்கிலும் சரி சிறிலங்கா இராணுவத்தினரின் போர் யுக்திகள் புலிகளால் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ள நிலையில், புலிகளிடம் இருந்து விடுவிக்கப்பட்ட பகுதி என்றும், ஏனைய பகுதிகள் விரைவில் விடுவிக்கப்படும் எனவும் கூறுவது உண்மைக்குப் புறம்பானது மட்டுமல்ல. நடைமுறைக்கு அப்பாற்பட்டதுமாகும்.

இந்தவகையில் சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ''உலகில் எங்கும் இல்லாதவாறு சமாதானத்தை விரைவில் ஏற்படுத்துவேன்'' எனக் கூறிக்கொண்டு இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வைத் தேர்ந்தெடுத்திருப்பது அவரது யதார்த்தத்திற்கு புறம்பான சிந்தனையின் வெளிப்பாடு என்பதில் ஐயம் எதுவுமில்லை,

இந்தநிலையில், நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் எக்கட்சி ஆட்சிக்கு வரினும் புலிகளின் அண்மைய தாக்குதல்களை ஒரு எடுத்துக் காட்டாகவும், பாடமாகவும் கொள்ளுதல் நல்லது. இதைப் புறந்தள்ளி இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் முடிந்த முடிவு என புதிய அரசாங்கம் முடிவு கொள்ளுமேயானால் அது வெற்றியடையப் போவதில்லை.

# பொருள்கள் விற்பனை கொழும்பில் அதிகரிப்பு

மரக்கறி வகைகள், கருவாடு, அரிசி மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் கொழும்பில் திடீரென அதிகரித்து இருப்பதாக தெரியவருகிறது. பொதுத் தேர்தலையடுத்து அமைதியற்ற சூழலும், பதற்றமும் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் மக்கள் அதிகளவில் பொருள்களை கொள்வனவு செய்வதில் ஈடுபட்டிருப்பதே இவ் விலை உயர்வுக்கு காரணம் எனவும் கூறப்படுகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் மக்கள் பெருமளவு பொருள்களை கொள்வனவு செய்வதாகவும், மதுபான விற்பனை கிறிஸ்மஸ் விழாக்காலம் போல நடைபெறுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## 17 போராளிகள்

- 2-ம் லெப்டினன்ட் வெண்ணிலவன் - வெள்ளையன் (கதிர்காமப்போடி துரைராஜா மட்டக்களப்பு)
- 2-ம் லெப்டினன்ட் நக்கீரன் - ரூபன் (கந்தையா விமலேஸ்வரன், மட்டக்களப்பு)
- 2-ம் லெப்டினன்ட் உலகவன் - ஜெனித் (இராசமணி செல்வராசா, மட்டக்களப்பு)
- வீரவேங்கை வவிராஜ் (கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி, மட்டக்களப்பு)
- வீரவேங்கை சந்திரமாறன் (அழகிப்போடி விக்கினேஸ்வரன், மட்டக்களப்பு)
- வீரவேங்கை வதனகுமார் (மாமாங்கம் சாம்பசிவம், மட்டக்களப்பு)
- வீரவேங்கை நந்தகுமார் (முத்துவசந்தகுமார், அம்பாறை)
- வீரவேங்கை பரமதரன் (வடிவேல் புவனேந்திரன், அம்பாறை)
- வீரவேங்கை ரமணி (கதிர்காமன் சபாரட்ணம், மட்டக்களப்பு)
- வீரவேங்கை குட்டிமணி (கணேசபிள்ளை சிவாகரன். மட்டக்களப்பு)
- வீரவேங்கை துமிலன் (சங்கரப்பிள்ளை மகேந்திரன், மட்டக்களப்பு)
- வீரவேங்கை ஆத்மன் (கணபதிப்பிள்ளை, ஜெயராஜா, மட்டக்களப்பு)

இப் 17 போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்

திய செய்தியாளர் மகாநாடு ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இன்று சகல மாவட்டங்களுக்கும் சர்வதேச கண்காணிப்புக் குழுவினர் செல்வாரென்றும், மொத்தம் 44 பேர் இக்கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

## மாவுடன் றுகுணு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான ஒரு தொகுதி மாவை ஏற்றிக்கொண்டு றுகுணு கப்பல் நாளை மறுதினம் பருத்தித் துறையை வந்துசேருமென யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

எனினும் கொழும்புத்துறைமுகத்தில் மாவை ஏற்றிக்கொண்டிருந்த இக்கப்பல் பருத்தித்துறை நோக்கி புறப்பட்டுள்ளதா என்பது பற்றி நேற்று மாலை வரை எமக்கு தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (பா, நி)

# மாகாண உறுப்பினர் சுட்டுக் கொலை

கம்பகா மாவட்டத்தில், அத்தனகல பகுதியில், தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொது ஜன ஐக்கிய முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம், இராஜாங்க அமைச்சர் போல் பெரேராவுக்கு சொந்தமான ஜீப் பொன்றில் வந்தவர்களால் ரஞ்சித் சிறிவர்த்தன என்ற இம் மாகாண சபை உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரியவருகிறது.

சொந்த பிரதிநிதிகள் இவ ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் டாக்டர் காமினி விஜேசேகரா, பொது ஜன ஐக்கியமுன்னணி சார்பில் தர்மசிறி சேனநாயக, ஆகியோர் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

## 4 வேட்பாளர்

ட்ட முதலாவது சுயேட்சைக் குழுவின் வேட்பாளர்கள் நால்வரும், ஏனைய இருபது பேரும் களுவாஞ்சிக்குடி பொலிசாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

நீதிபதி இவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். சட்டவிரோதமாக கூடிக் கலகம் விளைவித்தமை, வேட்பாளரின் மனைவியின் நகைகளை துப்பாக்கி முனையில் திருடியமை, காயம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகள். இவர்கள் மீதுசுமத்தப்பட்டுள்ளன சுயேட்சைக்குழுவின் தலைவரான முன்னாள் தமிழ் ஆயுதக்குழு ஒன்றின் உறுப்பினரான கோபிதராஜா என்பவரும் குற்றம் சுமத்தப்பட்டவர்களில் ஒருவராவார்.

## இடைவிடா

நாட்டின் வான்பரப்பில் இரவு பகலாக அடிக்கடி பறந்த வண்ணமிருந்தன.

அதேவேளை ஒரு சில விமானங்கள் பல பகுதிகளையும் சுற்றி நோட்டமிட்டதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. [21]

இந்திரன் சாந்தினி (வயது 8) எஸ் அருணாசலம் (வயது 58), ரி. செல்வகாந்தன் (வயது 28), ரி தங்கவேலு (வயது 38), ஏ. பாலகிருஷ்ணன் (வயது 29), உமாசங்கர் (வயது 23), விக்னேஸ்வரன் (வயது 29), ஆறுமுகம் (வயது 69), கிறிஸ் அன்ரனி (வயது 8), ஆ. லோகேஸ்வரன் (வயது 62).

## ஏழாலை

ஏழாலைப்பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைக்கு திருஞானசிவம் ஜெனீதன் வயது 10) பலியானார். மற்றும் எஸ் சிவபாதம் (வயது 52), சசிகலா (வயது 10) ஆகியோர் காயமடைந்தனர்.

## அளவெட்டி, மல்லாகம்

அளவெட்டி எறிகணையால் த. ரஞ்சிதமலர் (வயது 40), முத்துக்குமாரு பரமேஸ்வரி (54) மல்லாகம் ஆகியோர் காயமடைந்தனர்.

## நீர்வேலி

புத்தூர், நீர்வேலிப் பகுதி எறிகணைகளால் ஈ.மௌலீஸ்வரன் (வயது 52), நவரங்கன் (வயது 8), மீரா (வயது 9), பி. பரமேஸ்வரி (வயது 48) ஆகியோர் காயமடைந்தனர்

## சுளிபுரம்

சுளிபுரம் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையால் சங்கானையைச் சேர்ந்த 59 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார்.

## வடமராட்சி


வடமராட்சி தொண்டமனாறு பகுதி மீது மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களினால் சிதம்பரம் கந்தசாமி (வயது 47), நெடியகாட்டைச் சேர்ந்த இராமநாதன் நாகசுந்தரேஸ்வரி (வயது 59), கதிர்காமநாதன் தையல்நாயகி (வயது 60) ஆகியோர் காயமடைந்ததுடன் வல்வெட்டித்துறைசிவன் கோவில் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையால் இருவர் காயமடைந்தனர்.

## கட்டுமுறிவுபடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ★ ரி 81 | — 02 | ★ புகைக்குண்டு | — 01 |
| ★ ரி. 56 | — 01 | ★ ஐ எம். ரவை | —13,720 |
| ★ ஜி-3, சினைப்பர் ஸ்கோப்புடன் | — 01 | ★ நேட்டோ ரவை | — 2,350 |
| ★ ரவைக்கூடு | — 04 | ★ ஜி. பி. எம் ஜி சுடுகுழல் | — 01 |
| ★ எம். பி - 5, ஒலி அமுக்கியுடன் | — 01 | ★ ஜி. பி. எம். ஜி. தொடர் ரவை | — 400 |
| ★ ரவைக்கூடு | — 01 | ★ கிற்பாக் | — 10 |
| ★ ரவை | — 50 | ★ தண்ணீர்க்கான் | — 06 |
| ★ மொபைல் செட் | — 01 | ★ சார்ஜ் லைட் | — 01 |
| ★ அன்ரனா | — 01 | ★ ஏ. கே ரவைக்கூடு | — 26 |
| ★ எம் - 4 குண்டு | — 32 | ★ கொம்பாஸ் | -- 02 |

# கட்டுமுறிவு முகாம் தகர்ப்பில்

# வீரச்சாவடைந்த 17 போராளிகள்



மேஜர் கங்காதரன்



லெப். றொபெட்சன் [கமலவன்]



லெப், நம்பி [பாலு]



லெப். ரகுநாதன்



லெப். அருந்தாதரன் [அழகன்]




2- ம் லெப். வெண்ணிலவன் [வெள்ளையன் ]









# பேச்சோ, யுத்தமோ அது புலிகளுடனேயே

## அமைச்சர் ஹமீட் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுவார்த்தையோ, அல்லது யுத்தமோ விடுதலைப் புலிகளுடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும். பதினாறு மாத காலமாக நான் புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டபோது அவர்கள் வன்செயல் எதிலும் ஈடுபடவில்லை. ஆனால், பல்வேறு கட்சிகளும் கூடி சர்வகட்சி மகாநாடு நடத்திய போதும் எந்தவித முடிவும் மேற்கொள்ளப்படவில்லை அதே போல் பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் எவ்வித தீர்வையும் முன்வைக்கவில்லை என, வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் நகரில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# கிராமத்திற்குள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம்

## இருவர் காயம்

(கொழும்பு)

அகலவத்தை பாலிஸ் பகுதியில் கிராமமொன்றுக்குள் புகுந்த ஆயுதம் தாங்கிய நபர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதனால் இருவர் காயமடைந்தனர்.

இவர்கள் மூன்று வாகனங்களில் வந்ததாகவும் துப்பாக்கிப் பிரயோகத்தின் பின் இவர்கள் தலைமறைவாகி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் குறித்து களுத்துறைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# இறுதிப்போட்டி

கே. சீ. சீ. விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் கே. சீ. சீ வெற்றிக் கிண்ணத்திற்கான இறுதிப்போட்டி இன்றுகாலை 9-00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம் விளையாடவுள்ளது.

# கொடுப்பனவு

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தினால் நடத்தப்பெற்ற ஆண்டு 2ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பில் பங்குகொண்டோருக்கான கொடுப்பனவு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9. 00 மணிக்கு மருதனார் மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரியில் வழங்கப்படுமென்று கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994.08.14**

**ஞாயிறு இரவு**

08.01 - இசையரங்கம்-நிகழ்ச்சியில் பாடுபவர் திரு. தில்லைமணி அவர்கள்
08 30 - செய்திகள்
08.40 - தொடர் நாடகம் - இலங்கைமண் 36-ம் அங்கம்

**1994.08.15**

**திங்கள் காலை**

07.02 - மாவீர வணக்கம்

# வன்செயல் நடந்தால் காப்புறுதி கடினம்

சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் வகையில் வன்செயல்களில் ஈடுபட வேண்டாம் என இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

83 கலவரங்களின் போது ஏற்பட்ட சேதங்களுக்கே இது வரை நட்டஈடு அளிக்க முடியாமல் இருப்பதாகவும், எனவே தேர்தல் வன்செயல்களை முற்றாக தவிர்க்குமாறும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கேட்டுள்ளது.

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி




## திருமதி சின்னத்துரை நாகம்மா

தோற்றம் 15-08-1933 | மறைவு 26-07-1993

திதி - 14-08-1994


பாலூட்டி வளர்த்த அன்பான மலையான மலை
கொடிய அரக்கனின் பிடியில் மாய்ந்தாளே
பாசத்தின் பிணைப்பில் இருந்து பிரிவால்துயரம்
தாங்காத சித்திரா சித்திரப்பாவையானாளே
தாய்க்குத் தாயாக வளர்த்த மகனும்
அரக்கனின் பொம்பர் குண்டுக்கு இரையாகினானே
எம்மவர் வாழ்வில் விதி இது தானா?
என் இதயம் நாளொரு மேனி பொழுதொரு மேனியாக
வதங்கி வாடி வாழ்கின்றேனே
இக் கலங்கிய வாழ்வை நீடிப்பதிலும் மேலாக
என் பிள்ளைச் செல்வங்களிடம் நான் செல்வதே
என் மனநிறைவு என கூறினீர்களே!
ஆசை அம்மாவே உங்கள் மனநிறைவு பெறகூறினீர்கள்

2-ம லெப். நக்கீரன் [ருபன்] | 2-ம் லெப் உலகவன் [ஜெனித்] | வி. வே. வவிராஜ் | வி. வே. துமிலன்

வீ. வே.சந்திரமாறன் | வி. வே. வதனகுமார் | வி. வே நந்தகுமார் | வி. வே. ஆத்மன்

வி. வே, பரமதரன் | வி. வே. ரமணி | வி. வே. குட்டிமணி

11-08-1994 அன்று மட்டக் களப்பு மாவட்டம் ஆண்டாங் குள பிரதேச கட்டுமுறிவு இரா ணுவ எஸ். எவ். முகாம் விடு தலைப்புலிகளால் கைப்பற்றப் பட்டு முற்றாக அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில்17 விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சா வடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்ற னர்.

### திங்கள் காலை

07.02 - மா வீர வணக்கம்
07.15 - நீங்கள் கேட்டவை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## மரண அறிவித்தல்

### பரமேஸ்வரன் பிரதீபன்
(கப்டன் குமரன்)

நவாலியைச் சேர்ந்த பரமேஸ்வரன்பிரதீபன் (கப்டன் குமரன்) 11-08-94 அன்று மன்னாரில் வீரச்சாவடைந்தார். இவர் பரமேஸ்வரன் (பிரான்ஸ்), ஜெகதாம்பிகை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் பிரபாகரன் மானிப்பாய் இந்துக் கல்லூரி. மாலதி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dr. சர்வானந்தா கமலநாயகி (கோண்டாவில்) தம்பதிகளின் பெறாமகனும், மகேஸ்வரன் உமாதேவி, லோகேஸ்வரி தட்சிணாமூர்த்தி, காலஞ்சென்ற இராஜேஸ்வரன் சத்தியவதனி தம்பதிகளின் அன்பு மருமகனுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

தகவல்:
ப. பிரபாகரன்
(சகோதரர்)
(மானிப்பாய்
இந்துக் கல்லூரி)

நவாலி வடக்கு,
மானிப்பாய்.
13-08-1994 (9099)

என் மனநிறைவு என கூறினீர்களே!
ஆசை அம்மாவே உங்கள் மனநிறைவு பெறகூறினீர்கள்
என நாம் எண்ணுகையில் கூறியதை நீங்களும்
நிலை நாட்டினீர்களே ஒரு கணம் எங்களை எண்ணவில்லையே
இன்று உங்களை எண்ணி நாம் கலங்காமல் கலங்குகின்றோமே
அம்மா என்றுமே எங்கள் இதயங்களில் இருந்து நீங்கமாட்டீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை
என்றுமே வேண்டுகின்றோம்.

''விஸ்ணுமகால்''
வண்ணாங்கேணி,
பளை

சேமன் சின்னத்துரை
குடும்பத்தினர்.
(9094)

## 41-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
23-04-1965

உதிர்வு
05-07-1994

### செல்வன் சண்முகலிங்கம் சுதாகரன்

05-07-94 அன்று சுவிசில் அகாலமரணம் அடைந்தார்

சுதாகரிக்கும் உன் வதனம்
சுமந்து சென்ற எம் உறவில்
பிரிந்து விட்டதென்ற செய்தி
இருள்படிந்த நாட்களாச்சே
நினைவுகள் நிலைத்திருக்க
நின் ஆத்மா சாந்தி பெறுக

இ. இராஜேஸ்வரன்- மதி
குடும்பத்தினர்

96, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-10110)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது